திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.த.ஆனந்த் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பள்ளி சத்துணவுத் திட்டத்தின்கீழ் 66 சத்துணவு அமைப்பாளர்கள், 34 சமையலர்கள் மற்றும் 186 சமையல் உதவியாளர்கள் பணிக்கு தகுதியானோர் நேரடியாக நியமிக்கப்படவுள்ளனர்.

**அமைப்பாளர் பணித் தகுதிகள்:** பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொது பிரிவினா் மற்றும் ஆதிதிராவிடா் பிரிவினா்களுக்கு 10ம் வகுப்பு தோ்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினா் 8ம் வகுப்பு தோ்ச்சி (அல்லது) தோ்ச்சி பெறாதவராக இருக்கலாம். 31.08.2020 அன்றைய நிலையில் பொது மற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். மாற்றுத்திறானளிகள் அந்த இனத்துக்கென குறிப்பிட்ட குறைந்த பட்ச வயது பூர்த்தியடைந்தும் 43 வயதுக்குள் இருக்க வேண்டும்.

**சமையலர் பணித் தகுதிகள்:** பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொது பிரிவினா் மற்றும் ஆதிதிராவிடா் பிரிவினா்களுக்கு 8ம் வகுப்பு தோ்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினா் எழுதபடிக்க தெரிந்திருக்க வேண்டும். 31.08.2020 அன்றைய நிலையில் பொது மற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

**சமையல் உதவியாளர் பணித் தகுதிகள்:** பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொது பிரிவினா் மற்றும் ஆதிதிராவிடா் பிரிவினா்களுக்கு 5-ம் வகுப்பு தோ்ச்சி அல்லது தோ்ச்சி பெறாதவராக இருக்கலாம். பழங்குடியினா் எழுதபடிக்க தெரிந்திருக்க வேண்டும். 31.08.2020 அன்றைய நிலையில் பொது மற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

கல்வித் தகுதிச் சான்று, இருப்பிட சான்று, வருமான சான்று, வயது சான்று (மாற்று சான்றிதழ்), சாதி சான்று, விதவை சான்று, ஆதரவற்ற விதவை , கணவரால் கைவிடப்பட்டோர் இருப்பின் அதற்கான சான்றிதழ் மற்றும் மாற்று திறனாளியாக இருப்பின் அதற்கான சான்றிதழ் ஆகியவற்றில் சுய கையொப்பம் இட்ட நகல்களுடன் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.09.2020-க்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் காலிப்பணியிட விவரம் , இனசுழற்சி விவரம் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவங்களையும் தொடர்புடைய அலுவலகங்களில் பெற்றுகொள்ளலாம், அல்லது www.tiruvarur.nic.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தகுதியுடைய விண்ணப்பதாரா்களுக்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் மூலமாக நேர்காணலுக்கான அழைப்பு கடிதம் அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**திருவாரூர் மாவட்டம்**
**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்**
**சத்துணவு மைய அமைப்பாளர் / சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்**

| புகைப்படம் |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | |
| 3. | முகவரி | : | |
| 4. | ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி பெயர் | : | |
| 5. | கல்வி தகுதி | : | |
| 6. | பிறந்த தேதி / வயது | : | |
| 7. | இருப்பிடம் (குடும்ப அட்டையில் உள்ளபடி) | : | |
| 8. | சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று) | | |
| 9. | விண்ணப்பதாரர் திருமணம் ஆனவரா? | : | ( ஆம் / இல்லை) |
| 10. | ஊனமுற்றவர் சான்று (ஆம் / இல்லை) ஆம் எனில் % | : | ( ஆம் / இல்லை) |
| 11. | மனுதாரர் ஆதரவற்ற விதவை / கணவரால் கைவிடப்பட்டவரா? வட்டாட்சியர் சான்று | : | ( ஆம் / இல்லை) |
| 12. | குடும்ப ஆண்டு வருமானம் (வட்டாட்சியர் சான்றிதழ் உள்ளபடி) | : | |
| 13. | பணியிடம் கோரும் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் | : | |
| 14. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | : | |
| 15. | விண்ணப்பிப்பவரின் இருப்பிடத்திற்கும் பள்ளிக்கும் உள்ள தூரம் (3.கி.மீ.க்குள் இருக்க வேண்டும்) | : | |
| 16. | பிற குறிப்பு | : | |

**உறுதிமொழி**

மேலே என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மை என்றும், உண்மைக்கு மாறானது என்று தெரியவந்தால் நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைக்கு கட்டுப்படுகிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

இடம்:

நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இணைப்பு:

மேற்கண்டவைகளுக்கான சான்று நகல்கள்.